# Tamil Nadu Electricity Board Engineers' Sangam
## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

**Regd. No. 124/MDS (Recognised)**

(Affiliated to All India Federation of Power Diploma Engineers)

**144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.**

**44, Ramasamy Garden Street, Royapettah, Chennai - 600 014.**

**Phone : 28521968, E-mail: tnebes@yahoo.co.in**

| PRESIDENT | GENERAL SECRETARY | GENERAL TREASURER |
|---|---|---|
| Er. A. ANTONY PADOVARAJ | Er. R. BADRINARAYANAN | Er. G. MURALIKRISHNAN |
| 94438 72166 | 96001 49791 | 94434 53503 |


பெறுதல்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை–600 002.

க.எண்.பொ.செ./த.மி.வா.பொறியாளர் சங்கம்/கோ.1/எண். 20 /2017,நாள் 29.06.2017.

**மதிப்பிற்குரிய வாரியத்தலைவர் அவர்கள்,**

பொருள்: பொறியாளர் சங்கம் – ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தி – கவன ஈர்ப்பு நுழைவாயிற் கூட்டம் – 18.07.2017 அன்று மாலை 05.05 மணி அளவில் – சென்னை தலைமையகம் மற்றும் அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள் முன்பு நடத்தவிருப்பது – தொடர்பாக.

பார்வை:
1) 17.03.2015 Gate meeting.
2) 25.02.2016 Relay Hunger Fast.
3) 22.02.2016 அன்று வாரியத்தலைவரிடம் நடைபெற்ற பேச்சுவார்த்தை.
4) 23.02.2016 அன்று தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு அவர்களிடம் நடைபெற்ற பேச்சுவார்த்தை.
5) Chief Engineer / Personnel discussion minutes dt.24.02.2016.

---

பொறியாளர் சங்கம் வாரியத்துடன் பல கட்டமாக நடத்திய பேச்சு வார்த்தைகளில் ஏற்றுக்கொண்டு கீழ்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

➢ <u>அனைத்து விநியோகப் பிரிவுகளுக்கும் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளை அனுமதித்தல்</u>

விநியோகப் பிரிவுகளில் தொழில்நுட்ப உதவியாளர் என்ற கோரிக்கை வாரிய மட்டத்தில் 2005 லிருந்து பொறியாளர் சங்கத்தால் விவாதிக்கப்பட்டு, 2009 வேலைப்பளு மற்றும் ஊதிய மாற்று பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டு City பிரிவுகளுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டது.

தொடர்ந்து 2014 ஒப்பந்தத்தில் City பிரிவுகளுக்கு மட்டும் தொடர்ந்து அனுமதித்த வாரியம், 6 மாதங்களுக்குப்பிறகு அனைத்து பிரிவுகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி சென்னையில் கடந்த 17.03.2015ல் மாநிலம் தழுவிய கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் மேல் நடவடிக்கை இல்லாத நிலையில், தொடர்ந்து இக்கோரிக்கையை வலியுறுத்தி மீண்டும் 25.02.2016 அன்று முதல் நடைபெறுவதாக இருந்த "தொடர் உண்ணாவிரதப் போராட்டம்" வாரியத்தலைவருடன் 22.02.2016 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு அவர்களுடன் 23.02.2016 அன்று நடைபெற்ற விரிவான பேச்சுவார்த்தைகளில் இக்கோரிக்கை மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டு,

**"Already Technical Assistants are posted in city section. Recommendations will be placed to the work load committee to finalise during settlement on work load".**

என வாரியத்தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட Discussion Minutes dt.24.02.2016-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆனால் துர்ரதிஷடவசமாக, தற்பொழுது வேலைப்பளு பேச்சுவார்தைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் (Draft Proposal-ல்) வேலைப்பளு ஒப்பந்த திட்ட முன்வடிவில் ஏற்கனவே அளிக்கப்பட்டிருந்த City பிரிவுகளுக்கும் நீக்கப்பட்டுள்ளது. இது பொறியாளர் சங்கத்திற்கு மிகுந்த ஏமாற்றத்தையும், அதிர்ச்சியையும் அளித்துள்ளது.**

நியாயமான ஏற்றுக்கொண்ட இக்கோரிக்கையை விரைந்து நிறைவேற்றிடக் கோரியும்,

- <u>தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு அரசுத்துறைக்கு இணையான சம்பளம்</u>

இக்கோரிக்கையும் வாரியத்துடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிறைவேற்ற தாமதம் ஆன நிலையில்,

பொறியாளர் சங்கம் 17.03.2015 அன்று சென்னையில் நடத்தப்பட்ட மாநிலம் தழுவிய ஒருநாள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

தொடர்ந்து இக்கோரிக்கையை நிறைவேற்றிட வலியுறுத்தி மீண்டும் 25.02.2016 அன்று முதல் நடைபெறுவதாக இருந்த "தொடர் உண்ணாவிரதப் போராட்டம்" வாரியத்தலைவருடன் 22.02.2016 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து 23.02.2016 அன்று தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு அவர்களுடன் நடைபெற்ற விரிவான பேச்சுவார்த்தையில் இக்கோரிக்கை மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டு,

**"Recommendations will be sent to the wage revision committee for taking action during settlement on revision of wages".**

என வாரியத்தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட Discussion Minutes dt.24.02.2016-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியாயமான இக்கோரிக்கையை விரைந்து நிறைவேற்றிடக்கோரியும்,

➢ <u>தொழில்நுட்ப உதவியாளர் / சிவில் பதவிகள் உருவாக்குதல்</u>

இக்கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்திவரும் பொறியாளர் சங்கம் 19.07.2014ல் நடைபெற்ற Hydro Generation committee பேச்சு வார்த்தையில் வலியுறுத்தியதின் அடிப்படையில், ஏற்கனவே பகுதிநேர சிவில் பட்டயம் பெற்ற பல பொறியாளர்களுக்கு கல்வித்தகுதிக்குரிய தொழில்நுட்ப உதவியாளர் / சிவில் பதவிகளை உருவாக்கிட கமிட்டியால் பரிந்துரைத்தபோதிலும், **இப்பதவிகள் State cadre பதவிகளாக இருப்பதால், Hydro Generation-ல் மட்டுமல்லாமல், வேறு பகுதிகளிலும் பணியாற்றும் சிவில் பணியாளர்களுக்கென தனியாக Committee அமைத்து அதன்மூலம் முடிவெடுத்து இக்கோரிக்கை நிறைவேற்றப்படும் என மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில், வாரியத்தலைவரால் உறுதி அளிக்கப்பட்டது.**

இக்கோரிக்கை 17.03.2015 அன்று சென்னையில் நடைபெற்ற மாநிலம் தழுவிய "கவன ஈர்ப்பு ஆர்பாட்டத்தில்" வலியுறுத்தப்பட்டு தொடர்ந்து 25.02.2016 முதல் நடைபெற இருந்து தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றிட வலியுறுத்தியதின் அடிப்படையில், 22.02.2017அன்று வாரியத்தலைவருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் அடிப்படையில் தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு அவர்களிடம் 23.02.2016 அன்று நடைபெற்ற விரிவான பேச்சுவார்த்தைகளில் இக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில்

**"Particulars called to ascertain number of civil sub division and Pole casting yards in distribution circles and other areas. On receipt of particulars recommendation will be made to implement".**

என வாரியத்தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட discussion minutes dt.24.02.2016-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியாயமான இக்கோரிக்கையை விரைந்து நிறைவேற்றிடக்கோரியும்,

- பிரிவுப் பணிகளில் தினம் தினம் சந்திக்கும் R-APDRP, IMS, K2 Agreement மற்றும் works contract போன்ற பிரச்சனைகளுக்கு முறையான வழிகாட்டுதல்களோ, வரன்முறைகளோ இல்லாத நிலையில் நேரடியாக பொதுமக்களை சந்தித்து, வரும் பிரிவுப் பொறியாளர்களின் அனைத்து பிரச்சனைகளுக்கும் உரிய தீர்வினை அளித்திடவும், தளவாடப் பொருட்களை தடையின்றி வழங்கிட உரிய நடவடிக்கை எடுத்திடக்கோரியும்,

**சென்னையில் கூடிய பொறியாளர் சங்க மையப் பொறுப்பாளர்கள் கூட்டத்தில் மேற்கண்ட கோரிக்கைகளை விரைந்து அமல்படுத்தகோரி அரசு மற்றும் வாரியத்தின் கவனத்தை ஈர்த்திட வேண்டி 18.07.2017 அன்று மாலை 05.05 மணியளவில் சென்னை, அண்ணாசாலை தலைமையகத்திலும் அனைத்து மேற்பார்வை பொறியாளர் வட்ட அலுவலகங்களிலும்,**

**"கவனஈர்ப்பு நுழைவாயிற் கூட்டம்"**

– நடத்துவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது என்பதை தங்களது மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

மதிப்பிற்குரிய வாரியத்தலைவர் அவர்கள், வாரியம் பல கட்ட பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக்கொண்டு, நிலுவையில் உள்ள இக்கோரிக்கைகளை விரைந்து அமல்படுத்திடவும், பிரிவுப் பொறியாளர்களின் பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு அளித்திடவும் உரிய நடவடிக்கை எடுத்திட அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

**( R. பத்ரீநாராயணன் )**
பொதுச் செயலாளர்.

நகல்:

தலைவர் மற்றும் உறுப்பினர்கள் / வேலைப்பளு மற்றும் ஊதிய உயர்வு குழு.
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு / த.மி.உ. மற்றும் பகிர்மான கழகம்.
தொழில் நல்லுறவு ஆலோசகர் / த.மி.உ. மற்றும் பகிர்மான கழகம்.
தொழிலாளர் நலத்துறை ஆணையர் / தேனாம்பேட்டை / சென்னை.